செ.வெ.எண் : 16/ செப்டம்பர் நாள் : 13.09.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் 60,980 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது**
**மாவட்டஆட்சித் தலைவர்**
**முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கொரோனா மூன்றாவது அலையில் இருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 12.9.2021 அன்று மாநிலம் தழுவிய மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெறும் என அறிவித்து இருந்தார்கள். அதனை தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று 667 இடங்களில் இந்த மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது. பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இந்த முகாமில் கலந்து கொண்டு தடுப்பூசி செலுத்திக் கொண்டனர்.

நமது மாவட்டத்தில் உள்ள 11 ஒன்றியங்களில் 18 வயதுக்கு மேல் 6,84,147 நபர்கள் உள்ளனர். இதில் 37,388 நபர்கள் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு முதல் தவனை கொரோனா தடுப்பூசியும், 9,186 நபர்கள் இரண்டாவது தவனை கொரோனா தடுப்பூசியும் செலுத்தி கொண்டனர்.

4 நகராட்சிகளில் 18 வயதுக்கு மேல் 1,68,576 நபர்கள் உள்ளனர். இவர்களில் 6,337 நபர்கள் முதல் தவனை தடுப்பூசியும் 2,269 நபர்கள் இராண்டாவது தவனையும் தடுப்பூசியும் செலுத்தி கொண்டர்கள்.

7 பேரூராட்சிகளில் 18 வயதிற்க்கு மேல் 96,257 உள்ளனர். இதில் 4,808 நபர்கள் முதல் தவனை தடுப்பூசியும் 992 நபர்கள் இரண்டாவது தவனை தடுப்பூசியும், இந்த முகாம்களில் மூலம் செலுத்திக் கொண்டுள்ளனர்.

மாவட்டத்தில் மொத்தம் 48,533 நபர்கள் முதல் தவனை தடுப்பூசியும் 12,447 நபர்கள் இராண்டாவது தவனை தடுப்பூசியும் செலுத்தி கொண்டுள்ளனர். இதில் முதல் தவனை தடுப்பூசி செலுத்தியவர்கள் 56.03%, இராண்டாவது தவனை தடுப்பூசி செலுத்தியவர்கள் 11.36%, என மொத்தம் 67.39%, கொரோனா தடுப்பூசி நேற்று (12.09.2021) நடைபெற்ற முகாமில் செலுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**